செ.வெ.எண்:40/2020 நாள்:18.06.2020

**பத்திரிக்கைச் செய்தி**

**சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.ஜெயகாந்தன்,இ.ஆ.ப., அவர்கள் செய்திக் குறிப்பில் தெரிவித்ததாவது,**

தனியார் துறையில் வேலைதேடும் இளைஞர்கள் தங்கள் கல்வித்தகுதிக்கு பொருத்தமான வேலையை எளிதில் தேர்வு செய்யும் வண்ணம் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையானது https://www.tnprivatejobs.tn.gov.in என்ற வலைதளத்தை உருவாக்கியுள்ளது. இந்த வலைதளமானது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 16.06.2020 அன்று துவக்கி வைக்கப்பட்டது. இந்த வலைதளத்தில் வேலை தேடும் இளைஞர்கள் தங்கள் கல்வித்தகுதி மற்றும் சுயவிபரங்களை பதிவு செய்து தங்களுக்கு பொருத்தமான பணி வாய்ப்பினை பெறலாம். இந்த வலைதளத்தில் மாவட்டம் வாரியாக, கல்வித்தகுதி வாரியாக, சம்பளம் வாரியாக மற்றும் தொழில் வாரியாக பணிகளை தேர்வு செய்யும் வசதி உள்ளது. மேலும், வேலையளிக்கும் நிறுவனங்களும் தங்கள் நிறுவனத்திற்கு தேவையான பணியாளர்களின் எண்ணிக்கை மற்றும் கல்வித்தகுதி குறித்த விபரங்களை இந்த வலைதளத்தில் பதிவு செய்து தங்கள் நிறுவனத்திற்கு பொருத்தமான பணியாளர்களை தேர்வு செய்யலாம். இந்த வலைதளமானது அனைவரும் பயன்படுத்துவதற்கு வசதியாக எளிமையான முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த வலைதளத்தை பயன்படுத்த தனியார்துறை நிறுவனங்களும் வேலைதேடும் இளைஞர்களும் கட்டணம் எதுவும் செலுத்த தேவையில்லை என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.ஜெயகாந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**::வெளியீடு::**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**சிவகங்கை.**